بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 06 ஜுலை 2018** அன்று ஆற்றிய **ஜும்ஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், அவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்றைய நாட்களில் நான் பதர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களைப் பற்றி எடுத்துக் கூறி வருகின்றேன். வரலாற்றிலும், அறிவிப்புகளிலும் சில சஹாபாக்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சம்பவங்கள் மிகவும் விரிவாக கிடைக்கின்றது. ஆனால் பெரும்பான்மையானவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய சம்பவங்கள் மிகவும் சுருக்கமாகவே கிடைக்கின்றது. ஆனால் பதர் போரில் கலந்து கொண்டதன் காரணமாக அவர்களின் அந்தஸ்து தமக்குரிய இடத்திலேயே நிலைபெற்றுள்ளது. எனவே அவர்களைப் பற்றிய குறிப்பு சில வரிகளைக் கொண்டதாக இருந்தாலும் கூட அது எடுத்துக் கூறப்பட வேண்டும். இன்று எந்த சஹாபாக்களைப் பற்றி கூறப்பட இருக்கின்றதோ அவர்களைப் பற்றி மிகவும் சுருக்கமான குறிப்புகளே இருக்கின்றன.

ஹஸ்ரத் சுபைய் பின் கைஸ் பின் அய்ஷா அவர்கள் ஹஸ்ரஜி கோத்திரத்தைச் சார்ந்த ஓர் அன்ஸாரி சஹாபி ஆவார்கள். உஹது மற்றும் பதர் போரில் கலந்து கொண்டார்கள். அவர்களது தாயின் பெயர் கதீஜா பின்த் உமைர் பின் ஸைது ஆகும். அவர்களுக்கு ஒரு மகன் இருந்தார். அவரது பெயர் அப்துல்லாஹ் ஆகும். அவர் இளமைப் பருவத்திலேயே வஃபாத்தாகி விட்டார்கள். ஹஸ்ரத் அபாதா பின் கைஸ் மற்றும் ஸைது பின் கைஸ் அவர்களது சகோதரர் ஆவார்கள்.

ஹஸ்ரத் உனைஸ் பின் கதாதா ஒரு சஹாபி ஆவார்கள். உஹது போரில் அன்னார் ஷஹீதானார்கள். பதர் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். அன்னாருக்கும் எந்த குழந்தையும் கிடையாது. ஒரு அறிவிப்பில் வருகின்றது. உஹது நாளில் ஷஹீது ஆகும் போது ஹஸ்ரத் ஹஸ்ரத் ஹன்ஸா பின் ஹிதாம் அவர்கள் ஹஸ்ரத் உனைஸ் அவர்களது நிக்காஹ்வில் இருந்தார்கள்.

ஹஸ்ரத் மலைல் பின் வபுரா ஒரு சஹாபி ஆவார்கள். அன்னார் பனூ ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ அஹ்லானோடு தொடர்புடையவர்கள் ஆவார்கள். பதர் போரிலும், உஹது போரிலும் கலந்து கொண்டார்கள். அன்னாருக்கு ஸைது மற்றும் ஹபீபா என்ற சந்ததிகள் இருந்தனர். அவர்களது தாயாரின் பெயர் உம்மே ஸைது பின்தே நஸ்லா பின் மாலிக் ஆகும். ஒரு அறிவிப்பில், அன்னார் பதர் போர் மற்றும் ஏனைய அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு கலந்து கொண்டார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

பிறகு இன்னொரு சஹாபியின் பெயர் ஹஸ்ரத் நவ்ஃபல் பின் அப்துல்லாஹ் பின் நஸ்லா ஆகும். மேலும் உஹது போரில் ஷஹீதானார்கள். அன்னாரது சந்ததியும் அன்னாருக்குப் பிறகு தொடரவில்லை.

ஹஸ்ரத் வதீஆ பின் அம்ரு ஒரு சஹாபி ஆவார்கள். அன்னார் பனூ நஜ்ஜார் கோத்திரத்தினருக்கு உதவியாளர்களாக விளங்கிய பனூ ஜுஹைனாவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னார் பதர் போரிலும், உஹது போரிலும் கலந்து கொண்டுள்ளார்கள். ஹஸ்ரத் ரபீஆ பின் அம்ரு அன்னாரது சகோதரர் ஆவார்கள்.

ஹஸ்ரத் யஸீத் பின் முன்ஸிர் பின் சராஹ் பின் ஹனாஸ் ஒரு சஹாபி ஆவார்கள். அன்னார் பனூ ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். பைஅத்தே உக்பாவிலும் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் யஸீத் பின் முன்ஸிர் மற்றும் ஆமர் பின் ரபீஆ ஆகிய இருவருக்குமிடையில் சகோதரத்துவத்தை நிலைநாட்டினார்கள். அன்னார் பதர் போரிலும், உஹது போரிலும் கலந்து கொண்டார்கள். அன்னார் மரணமடைந்த சமயத்தில் அன்னாருக்கு எந்த குழந்தையும் இருக்கவில்லை. அன்னாரது சகோதரரான மாகிர் பின் முன்ஸிர் அவர்களும் பைஅத்தே உக்பா மற்றும் பதர் போர் மற்றம் உஹது போரிலும் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் ஹார்ஜா பின் ஹுமைர் அஷ்ஜயீ ஒரு சஹாபி ஆவார்கள். அன்னார் பனூ ஹஸ்ரஜ் கோத்திரத்தினருக்கு உதவியாளர்களாக விளங்கிய பனூ அஷ்ஜவை சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னாரது சகோதரின் பெயர் அப்துல்லாஹ் பின் ஹுமைய்யர் ஆகும். உஹது போரில் அன்னாரோடு கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் சுராக்கா பின் அம்ர் ஒரு சஹாபி ஆவார்கள். அன்னார் அன்ஸாரி சஹாபி ஆவார்கள். அன்னாரது மரணம் ஜமாதியுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரி 8 வது மாதத்தில் மூத்தா போரில் நிகழ்ந்தது. அன்னாரது தாயின் பெயர் அதீலா பின்த் கைஸ் ஆகும். ஹஸ்ரத் சுராக்கா அவர்கள் அன்ஸாரிகளின் கண்ணியமிக்க கோத்திரமான பனூ நஜ்ஜாரைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நஹ்ஜா மவ்லா அம்ரு மற்றும் சுராக்கா பின் அம்ர் ஆகிய இருவருக்கிடையில் சகோதரத்துவத்தை நிலைநாட்டினார்கள். அன்னார் பதர் போரிலும், உஹது போரிலும், அகழ் போரிலும், கைபர் போரிலும் கலந்து கொண்டார்கள். மேலும் அன்னார் ஹுதைபிய்யா உடன்படிக்கையின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அருகாமையை பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் சுராக்கா பின் அமர் அவர்கள் பைஅத்தே ரிஜ்வானில் கலந்து கொண்ட நற்பேறு பெற்ற சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள்.

ஹஸ்ரத் அப்பாத் பின் கைஸ் ஒரு சஹாபி ஆவார்கள். அன்னாரது மரணம் ஹிஜ்ரி 8 வது ஆண்டில் மூத்தா போரில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் அப்பாத் ஹஸ்ரத் அபூ தர்தா அவர்களின் சிறிய தந்தை ஆவார்கள். ஹஸ்ரத் அப்பாத் அவர்கள் பதர் போர், உஹது போர், அகழ் போர் மற்றும் கைபர் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹுதைபிய்யா உடன்படிக்கையிலும் அன்னார் கலந்து கொண்டார்கள். மேலும் மூத்தா போரில் அன்னாரது ஷஹாதத் நிகழ்ந்தது.

ஹஸ்ரத் அபூ அஸ்யாஹ் பின் சாபித் பின் நுஃமான் அவர்கள் ஒரு சஹாபி ஆவார்கள். அவர்களது மரணம் ஹிஜ்ரி ஏழாவது ஆண்டில் நிகழ்ந்தது. பதர், உஹது மற்றும் அகழ் போரிலும், ஹுதைபிய்யா உடன்படிக்கையிலும் கலந்து கொண்டுள்ளார்கள். ஹிஜ்ரி ஏழாம் ஆண்டில் நடைபெற்ற கைபர் போரில் ஷஹீதானார்கள். ஒரு யூதன் அன்னாரது தலையில் தாக்கினான். அன்னாரது தலை உடலை விட்டு பிரிந்தது. இதன் விளைவாக அன்னாரது ஷஹாதத் நிகழ்ந்தது என்று கூறப்படுகின்றது.

ஹஸ்ரத் அன்ஸா ஒரு சஹாபி ஆவார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அபிசீனிய அடிமையாவார். அன்னாரது பெயர் அன்ஸா என்றும் அபூ அன்ஸா என்றும் வருகின்றது.

அபூ மஸ்ரூஹ் என்பது அன்னாரது சுட்டுப் பெயராகும் என்று சிலர் கூறுகின்றனர். ஹஸ்ரத் அன்ஸா அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களிலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் ஹிஜ்ரத் காலகட்டத்தில் மதீனாவிற்கு சென்றார்கள். மேலும் ஸஅது பின் ஹேஸ்மா அவர்களின் விருந்தினரானார்கள். எப்போது வரை உயிரோடு இருந்தார்களோ அப்போது வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தொண்டு செய்வதை வழக்கமாக கொண்டிருந்தார்கள். அவர்கள் எந்த அளவுக்கு கட்டுப்பட்டு நடப்பவர்களாக இருந்தார்கள் என்றால் அன்னாரைப் பற்றி ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. அதாவது அன்னார் அமரும் போது கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுமதி பெற்ற பிறகே அமர்வார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பதர் போரில் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் அபூ கப்ஷா சுலைம் ஒரு சஹாபி ஆவார்கள். அபூ கப்ஷா அன்னாரது சுட்டுப் பெயராகும். அன்னாரது மரணம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் நிகழ்ந்தது. அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட ஃபாரசீக அடிமையாவார்கள். அன்னார் பதர் யுத்தத்திலும் கலந்து கொண்ட சஹாபி ஆவார்கள். அன்னார் இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் இஸ்லாத்தை தழுவினார்கள். ஹிஜ்ரத் செய்வதற்கான அனுமதி கிடைத்தவுடன் மதீனா சென்று விட்டார்கள். மேலும் பதர் போர் தவிர ஏனைய அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள்.

மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த பிறகு அன்னார் ஹஸ்ரத் குல்ஸூம் பின் அல்ஹதம் அவர்களிடத்தில் தங்கினார்கள். ஸஅத் பின் ஹேஸ்மா அவர்களிடத்தில் தங்கியதாக இன்னொரு அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக நியமிக்கப்படுவதற்கு முந்தைய நாள் அன்னாரது மரணம் நிகழ்ந்தது.

ஹஸ்ரத் மர்ஸித் பின் அபீ மர்ஸித் ஒரு சஹாபி ஆவார்கள். அன்னாரது மரணம் ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டில் சஃபர் மாதத்தில் ரஜீஃ என்ற இடத்தில் நிகழ்ந்தது. அன்னார் பதர் போரில் கலந்து கொண்ட சஹாபி ஆவார்கள். மேலும் ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் அவர்களின் உதவியாளர் ஆவார்கள். அன்னார் தனது தந்தையுடன் பதர் போரில் கலந்து கொண்டார்கள். அன்னார் இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் இஸ்லாத்தை தழுவினார்கள். மேலும் பதர் போர் நடைபெறுவதற்கு முன்பாகவே ஹிஜ்ரத் செய்து மதீனா சென்று விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அவ்ஸ் பின் சாமத் அவர்களுடன் அன்னாருக்கு சகோதரத்துவத்தை நிலைநாட்டினார்கள். பதர் போரின் நாளில் அன்னார் குதிரையில் வந்து கலந்து கொண்டார்கள். அந்த குதிரையின் பெயர் சபல் ஆகும்.

இப்னு இஸ்ஹாக் அவர்கள் எழுதுகின்றார்கள். ஹஸ்ரத் மர்ஸத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் ரஜீஃ என்ற இடத்திற்கு அனுப்பப்பட்ட ஒரு படையின் தலைவராக விளங்கினார்கள். இந்த படையின் தலைவராக ஹஸ்ரத் ஆஸிம் பின் சாபித் அவர்கள் விளங்கியதாக சிலர் எண்ணுகின்றார்கள்.

ஹஸ்ரத் அபூ மர்ஸித் பின் ஆஸ் பின் அல் ஹுஸைன் கனவி ஒரு சஹாபி ஆவார்கள். அவர்களது மரணம் ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. அன்னார் சிரியாவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னார் இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களிலேயே இஸ்லாத்தை தழுவினார்கள். மேலும் ஹிஜ்ரத்திற்கான அனுமதி கிடைத்த பிறகு மதீனா வந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கும் ஹஸ்ரத் இபாதா பின் சாமத் அவர்களுக்கும் இடையில் சகோதரத்துவத்தை நிலைநாட்டினார்கள். ஹஸ்ரத் அபூ மர்ஸித் (ரலி) அவர்களும் அவர்களது மகனான மர்ஸித் அவர்களும் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்ற போது ஹஸ்ரத் குர்ஸூம் பின் அல்ஹதம் என்பவரது வீட்டில் தங்கினார்கள்.

ஹஸ்ரத் அபூ மர்ஸித் பெருமானார் (ஸல்) அவர்களுடன் அனைத்து போர்களிலும் கலந்து கொண்டுள்ளார்கள். ஹஸ்ரத் அபூ மர்ஸித் அவர்களுக்கு வரலாற்றில் இந்த அந்தஸ்து இருக்கின்றது. அதாவது ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தாஹ் அவர்கள் மக்கா வெற்றிக்கு முன்பு ஒரு பெண்ணின் மூலமாக மக்கத்து மக்களுக்கு இரகசியமாக ஒரு தகவலை அனுப்பியிருந்தார். ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த கடிதத்தை பெற்றுக் கொண்டு வருமாறு எந்த படையை அனுப்பினார்களோ அவர்களில் ஒருவர் ஹஸ்ரத் அபூ மர்ஸித் ஆவார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஒரு அறிவிப்பையும் செய்துள்ளார்கள். ஹஸ்ரத் அபூபகர் சித்தீக் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 12 வது ஆண்டில் தமது 66 வது வயதில் அன்னாரது மரணம் நிகழ்ந்தது.

ஹஸ்ரத் சலேத் பின் கைஸ் பின் அம்ரு ஒரு சஹாபி ஆவார்கள். அவர்களது மரணம் ஹிஜ்ரத்தின் 14 வது ஆண்டில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் சலேத் பின் கைஸ் மற்றும் ஹஸ்ரத் அபூ சல்மா ஆகிய இருவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு பனூ அவ்தி குடும்பத்தின் அதி பின் நஜ்ஜாரின் சிலையை உடைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா சென்றார்கள்.

அன்னாரின் ஒட்டகம் பனூ அதியின் வீட்டிற்கு அருகே சென்றது. அப்போது சலேத் பின் கைஸ் அபூ சலேத் மற்றும் அசீரா பின் அபூ ஹவாரிஜா தடுக்க நினைத்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், எனது ஒட்டகத்தை விட்டு விடுங்கள். இப்போது இது இறைவன் புறமிருந்து நியமிக்கப்பட்டிருக்கின்றது. எங்கு இறைவன் விரும்புகின்றானோ அங்கு இது தானே அமர்ந்து விடும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் சலேத் அவர்கள் அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். ஜிஸ்ரானி உபைது போரில் ஹிஜ்ரி 14 வது ஆண்டில் அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஷஹீதானார்கள்.

ஹஸ்ரத் முஜஸ்ஸிர் பின் ஸியாத் ஒரு சஹாபி ஆவார்கள். முஜஸ்ஸிர் அன்னாரது சுட்டப் பெயராகும். அதன் பொருள் தடித்த உடலை கொண்டவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஜஸ்ஸிர் மற்றும் ஆகில் பின் பகீர் ஆகிய இருவருக்குமிடையில் சகோரத்துவத்தை நிலைநாட்டினார்கள். ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்கள் பதர் போரிலும், உஹது போரிலும் கலந்து கொண்டார்கள்.

இப்னு இஸ்ஹாக் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபு பஹ்தரி அவர்களை கொலை செய்ய தடை விதித்திருந்தார்கள். ஏனென்றால், மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு துன்பங்கள் கொடுப்பத்திலிருந்து அவர் மக்களை தடுத்து வந்தார். அதனால ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரை கொலை செய்யக் கூடாது என்று கூறினார்கள். அவர் தாமும் அன்னாருக்கு எந்தவொரு துன்பமும் இழைத்ததில்லை. குறைஷிகள் பனூ ஹாஷிம் மற்றும் பனூ மத்தலிபின் உடன்படிக்கைக்கு எதிராக நின்றனர். அவ்வாறு உடன்படிக்கைக்கு எதிராக நின்ற மக்களில் இவரும் ஒருவராவார்.

ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்கள் அபு பக்தரியை சந்தித்தார்கள். அவரிடம், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உம்மை கொலை செய்ய எங்களை தடுத்துள்ளார்கள் என்று கூறினார்கள். அபூ பஹ்தரியுடன் மக்காவிலிருந்து அவருடன் வந்த ஒருவரும் இருந்தார். அபூ பஹ்தரி, என்னுடன் வந்திருப்பவரைப் பற்றி என்ன கட்டளை இடப்பட்டுள்ளது? என்று வினவினார். ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் உம்முடன் வந்திருப்பவரை விட மாட்டோம். நபி (ஸல்) அவர்கள் உம்மை பற்றி மட்டுமே இவ்வாறு கட்டளை பிறப்பித்துள்ளார்கள் என்று கூறினார்கள்.

அதற்கு அவர், நாங்கள் இருவரும் மரணித்தாலும் ஒன்றாகவே மரணிப்போம். மக்கத்து பெண்கள், நான் என்னுடைய வாழ்க்கைக்காக என்னுடன் வந்திருப்பவரை விட்டு விட்டேன் என்று கூறி அழைவதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது என்று கூறினார். பிறகு இருவரும் ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்களுடன் சண்டையிட ஆயத்தமாயினர். ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்கள் அவர்களை கொன்று விட்டார்கள்.

ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்களின் சந்ததிகள் மதீனாவிலும், பக்தாதிலும் இருந்தார்கள். அபீ வாயிஸா அவர்கள் அறிவிக்கின்றார்கள். உஹது போரில் ஷஹீதான மூன்று மனிதர்கள் ஒரே கபரில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்கள் முஜஸ்ஸிர் பின் ஸியாத், நுஃமான் பின் மாலிக் மற்றும் அப்தா பின் ஹிஸ்ஸாஸ் ஆவார்கள்.

ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் பின் ஜமூஃ ஒரு சஹாபி ஆவார்கள். அவர்களது மரணம் ஹஸ்ரத் உமர் அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் குபாப் அவர்கள் பதர் போரிலும், உஹது, அகழ் மற்றும் அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு இருந்தார்கள். உஹது போரில் பெருமானார் (ஸல்) அவர்களோடு உறுதியான பாதத்துடன் நிலைத்தி நின்றார்கள்.

பதர் போரில் எந்த இடத்தில் இஸ்லாமிய படை தனது கூடாரத்தை அமைத்திருந்ததோ அது தொடர்பாக ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம், இறைவனது அறிவிப்பிற்கிணங்க தாங்கள் இந்த இடத்தை தேர்ந்தெடுள்ளீர்களா? அல்லது வெறுமனே போர் தந்திரத்தின் அடிப்படையில் இதை மேற்கொண்டுள்ளீர்களா? என்று வினவினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், இது எந்தவொரு இறை அறிவிப்பின் அடிப்படையில் போடப்பட்டதல்ல. நீங்கள் ஏதாவது ஆலோசனை கொடுக்க விரும்பினால் தாருங்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் அவர்கள், எனது எண்ணத்தின் அடிப்படையில் இந்த இடம் சிறந்த இடமல்ல. நாம் முன்னேறிச் சென்றவாறு குறைஷிகளுக்கு அருகேயுள்ள நீரூற்றை நாம் கைப்பற்ற வேண்டும். நான் அந்த நீரூற்றை அறிந்தவனாக இருக்கின்றேன். அதன் தண்ணீரும் நன்றாக இருக்கும். தண்ணீரும் அதிகமாக இருக்கும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அந்த ஆலோசனையை விரும்பினார்கள். அப்போது வரை குறைஷிகள் பள்ளத்தாக்கிற்கு அருகில் தான் தமது கூடாரத்தை அமைத்திருந்தார்கள். மேலும் அந்த நீரூற்று காலியாகவே இருந்தது. முஸ்லிம்கள் முன்னேறிச் சென்று அந்த நீரூற்றை கைப்பற்றினார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் ஜிப்ரீல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இறங்கினார். மேலும், ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் அவர்கள் வழங்கிய ஆலோசனையே சரியானது என்று கூறினார்கள். குபாபே! நீர் சிந்தித்து ஆலோசனை வழங்கினீர் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். பதர் போரில் ஹஸ்ரஜின் கொடி ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் அவர்களிடம் இருந்தது. ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் அவர்கள் பதர் போரில் கலந்து கொண்ட போது அன்னாரது வயது 33 ஆகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தமது உளவாளிகள் மூலமாக குறைஷிகளின் படை நெருங்கி வருவதற்கான செய்தி கிடைத்தது. அன்னார் குபாப் பின் மன்ஸர் அவர்களை எதிரிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களது வலிமையை தெரிந்து கொண்டு வரும்படி அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் குபாப் அவர்கள் இரசியமாக சென்றார்கள். மிகவும் விழிப்புடன் செயல்பட்டவாறு சிறிது நேரத்திலேயே திரும்பி வந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடன் அனைத்து நிலைமைகளையும் பற்றி எடுத்துக் கூறி விட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கரீலா மற்றும் நஜீர் தினத்திலும் அன்னாரின் ஆலோசனைகளின்படி செயல்பட்டார்கள். அன்னாரது மரணம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்த போது அப்போது முஸ்லிம்களில் ஏற்படிருந்த நிலைமையை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்கள். அந்த சம்பவம் தொடர்பாக வருகின்றது.

ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். மேலும் இந்த இரண்டு விஷயங்களில் உங்களுக்கு எந்த விஷயம் மிகவும் பிடித்தமானது? என்று வினவினார்கள். அதாவது நீங்கள் உலகத்தில் உங்களது சஹாபாக்களுடன் இருக்க விரும்புகின்றீர்களா? அல்லது அருட்கொடைகள் நிரம்பிய சுவர்க்கத்தில், நிலைத்திருக்கக்கூடிய அருட்கொடைகளை அளிப்பதாக அவன் உங்களுக்கு அளித்துள்ள வாக்குறுதியுடன், நீங்கள் உங்களது இறைவனிடம் செல்ல விரும்புகின்றீர்களா? என்று வினவினார்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம், நீங்கள் என்ன ஆலோசனை வழங்குகின்றீர்கள்? என்று வினவினார்கள். அதற்கு சஹாபாக்கள், அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் எங்களோடு இருப்பதே எங்களுக்கு மிகவும் விருப்பமாகும் என்று கூறினர். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் குபாப் பின் மன்ஸர் அவர்களை நோக்கி, நீங்கள் ஏன் எதுவுமே பேசாமல் இருக்கின்றீர்கள்? என்று கூறினார்கள். நான் அதற்கு, அல்லாஹ்வின் தூதரே! உங்களது இறைவன் உங்களுக்காக எதை விரும்புகின்றானோ அதை நீங்கள் விரும்புங்கள் என்று கூறினேன். அன்னார் எனது கூற்றை விரும்பினார்கள்.

ஹஸ்ரத் ரஃபா பின் ராஃபிஃ பின் மாலிக் பின் அஜ்லான் ஒரு சஹாபி ஆவார்கள். இவர்கள் அன்ஸாரி சஹாபி ஆவார்கள். இவர்களது மரணம் ஹஸ்ரத் அமீர் முஆவிய்யா அவர்கள் அமீராக இருந்த ஆரம்ப நாட்களில் நிகழ்ந்தது. அனைத்து போரிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். அன்னாரது இரண்டு சகோதரர்களான கலாத் பின் ராஃபி மற்றும் மாலிக் பின் ராஃபி ஆகிய இருவரும் பதர் போரில் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் மஆஸ் அவர்கள் தமது தந்தையான ஹஸ்ரத் ரஃபா பின் ராஃபி அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். அவர்களது தந்தை பதர் போரிலும் பங்கு பெற்றவர்கள் ஆவார்கள். அவர்கள் கூறினார்கள். ஜிப்ரீல் நபி (ஸல்) அவர்களிடத்தில், நீங்கள் முஸ்லிம்களில் பதர் போரில் கலந்து கொண்டவர்களுக்கு எந்த அந்தஸ்தை வழங்குகின்றீர்கள்? என்று வினவினார். அதற்கு அன்னார், சிறந்த முஸ்லிம் என்று கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள், அவ்வாறே பதர் போரில் கலந்து கொண்ட அந்த மலக்குமார்களும் சிறந்தவர்கள் ஆவார்கள் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஒரு சம்பவத்தைப் பற்றி மேலும் விரிவாக எடுத்துக் கூற விரும்புகின்றேன். ஹஸ்ரத் அமர் பின் ஆஸ் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை கேட்டார்கள். அதாவது அம்மார் பின் யாஸிர் அவர்களை கிளர்ச்சியார்களின் கூட்டம் தான் கொலை செய்யும். மேலும் ஹஸ்ரத் அம்மார் அவர்களை ஷஹீதாக்கியதும் ஹஸ்ரத் அமீர் முஆவிய்யாவின் படை வீரர்கள் தான். இந்த விஷயம் தொடர்பாக சில மக்கள், இவர்கள் கிளர்ச்சியார்களின் படையில் இருந்தார்கள் என்றால் இவர்களது பெயரை ஏன் கண்ணியத்துடன் நினைவு கூற வேண்டும்? மேலும் அதுமட்டுமின்றி அமீர் முஆவிய்யாவைப் பற்றியும் ஜமாஅத்தின் பிரசுரங்களில் ஒரு குறிப்பான அந்தஸ்து இருக்கின்றது என்று கேள்வி கேட்கின்றனர்.

முதல் விஷயம் என்னவென்றால், சஹாபாக்கள் அந்தஸ்து தொடர்பாக அவர் மன்னிக்கப்படுவார். இவர் மன்னிக்கப்பட மாட்டார் என்று கூறுவது நமது பணியல்ல.

ஒரு அறிவிப்பில் வருகின்றது. அபூ லுஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள். உமர் பின் ஷர்ஹபீல் அபூ முயஸ்ஸர் அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் அவர்களது மாணவர்களில் ஒருவராக இருந்தார்கள். கனவில் பார்த்தார்கள். அதாவது ஒரு பசுமையான தோட்டம் இருக்கின்றது. அதில் சில கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதில் ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் அவர்களும் இருக்கின்றார்கள். மேலும் சில கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஸூல்கலா அவர்கள் இருந்தார்கள். அப்போது அபூ முயஸ்ஸர் அவர்கள், இவர்கள் ஒருவர் மற்றொருவருக்கு எதிராக போர் செய்து கொண்டிருந்தார்களே? இது எவ்வாறு நிகழ்ந்தது என்று கேட்கின்றார். அப்போது அவருக்கு, இந்த மக்களை படைத்து பரிபாலிக்கக்கூடியவனை அவர்கள் மிகவும் அதிகமாக மன்னிக்கக் கூடியவனாக பெற்றார்கள். எனவே தற்போது அவர்கள் ஒன்றாக ஆகிவிட்டார்கள் என்று பதில் கூறப்பட்டது.

எனவே இந்த விவகாரங்கள் தற்போது அல்லாஹ்விடம் உள்ளது. இந்த விவகாரங்கயையும், கருத்து வேறுபாடுகளையும் நமது உள்ளத்தில் இடமளிப்பது நமது வேலையல்ல. இதன் காரணமாகவே முஸ்லிம்களிலும் பிரிவினை ஏற்பட்டுக் கொண்டே சென்றது. அதன் விளைவுகளையும் நாம் இன்று பார்க்கின்றோம்.

இந்த விஷயங்கள் நமக்கும் பாடமாகும். இந்த விஷயங்களுக்கு உள்ளத்தில் இடமளிப்பதற்கு பகரமாக ஒற்றுமையில் நிலைத்திருங்கள். நாம் எப்போதும் ஒன்றுபட்டு இருக்கவும், ஒற்றுமையில் நிலைத்திருக்கவும், நன்மைகளில் முன்னேறிச் செல்வதற்கும் அல்லாஹ் நமக்கு வாய்ப்பு அளிப்பானாக. ஆமீன்.

**மொழியாக்கம் : முஅல்லிம் அ.கலீல் அஹ்மது**